## 11.8 திட்டமிடல் பயிற்சிக்கான செலவினம், நிதி ஒதுக்கீடு

திட்டம் மற்றும் வளர்ச்சி (மா.தி–2) துறை

அரசாணை (நிலை) எண்.11 நாள் : 2.2.2001

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.113 திட்டம் மற்றும் வளர்ச்சி (மாதி–2)துறை, நாள் 2.7.99
2. அரசாணை (நிலை) எண்.141 திட்டம் மற்றும் வளர்ச்சி (மாதி–2)துறை, நாள் 18.8.99
3. அரசாணை (நிலை) எண்.141 திட்டம் மற்றும் வளர்ச்சி (மாதி–2)துறை, நாள் 25.8.2000
4. உறுப்பினர்–செயலர், மாநிலத் திட்டக் குழு நேமுக எண்.3339/மாதிகு/ 2000–1, நாள்15.9.2000
5. உறுப்பினர்–செயலர், மாநிலத் திட்டக் குழு நேமுக எண்.1348/ மாதிகு/ மாதி/2000–1, நாள் 25.9.2000

**ஆணை**

பார்வை 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஊரக மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பிற வளர்ச்சித் துறைகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கு மாநிலத் திட்டக் குழு மூலமாக பல்வகைத் திட்டமிடல் பயிற்சிகள் வழங்கவும், பார்வை 2ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி சென்னை மாவட்டத்தை தவிர இதர 28 மாவட்டங்களில் தோற்றுவிக்கப்பட்ட மாவட்டத் திட்டப் பிரிவுகளின் பணியிடங்களை பார்வை 3ல் படிக்கப்பட்ட அரசாணையில் 30.6.2001 வரை நீட்டிப்பு செய்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. பார்வை 4 மற்றும் 5ல் படிக்கப்பட்ட நேர்முகக் கடிதங்களில் மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினர்–செயலர் அவர்கள் ஊரக மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள அலுவல் சாரா மக்கட் பிரதிநிதிகளுக்கு பல்வகைத் திட்டமிடல் பயிற்சி வழங்குதல், 28 மாவட்டத் திட்டப் பிரிவுக ளுக்கு நகல் எடுக்கும் கருவி, ஈப்பு, மோடம் வசதியுடன் கூடிய தொலைபேசி இணைப்பு மற்றும் மாநிலத் திட்டக் குழுவில் குழுமத் தலைவர்(மாவட்டத் திட்டம்) உபயோகத்திற்கு சீருந்து மற்றும் இதர செலவினங்களுக்காக 2000–01–ம் நிதியாண்டில் மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபாய் 3.00 கோடியிலிருந்து 2000–01–ம் ஆண்டுடில்நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி ரூ.1,57,24,000/– ஒதுக்கீடு செய்து ஒப்பளிப்பு ஆணை வெளியிடுமாறு அரசை வேண்டியுள்ளார்.

2. மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினர்–செயலர் அவர்களின் கருத்துருவை கவனமாக பரிசீலனை செய்து அரசு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

1) இணைப்பு (1) கலம் 3இல் குறிப்பிட்டுள்ளவாறு பல்வகைத் திட்டமிடல் பயிற்சி, 28 மாவட்டத் திட்டப் பிரிவுகளுக்கு ஈப்புகள், நகல் எடுக்கும் கருவி, தொலைபேசி இணைப்பு, மோடம், தமிழ் வானவில் மென்பொருள் மற்றும் மாநிலத் திட்டக் குழுவின் குழுமத் தலைவர் (மாவட்டத் திட்டம்) அவர்கள் உபயோகத்திற்கு சீருந்து, நகல் எடுக்கும் கருவி, மோடம், தமிழ் வானவில் மென்பொருள் ஆகிய செலவினங்களுக்கு மொத்தம் ரூ.157.24 இலட்சம் (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தி ஏழு லட்சத்து இருபத்தி நான்காயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மாவட்ட வாரியாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள ஈப்பு மற்றும் கருவிகள் விவரம் இணைப்பு 2இல் கொடுக்கப்பட்டுள்ளது.

2) பத்தி 2(1) ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள கூடுதல் செலவினத்திற்கான அடையாள நிதியொதுக்கங்கள் 2000–2001 ஆம் ஆண்டுக்கான இறுதி துணை மானிய கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை, மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறுநிதியொதுக்கத்தின் மூலம் செலவிடப்படும். மறுநிதியொதுக்கத்தில் நிதி ஒதுக்கீடு செய்வதை எதிர்நோக்கி, செலவினங்களை மேற்கொள்ளுவதற்கு மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினர்–செயலருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மேலும் நடப்பு ஆண்டு இறுதித் திருத்திய மதிப்பீட்டில் இச்செலவினத்தை ஒப்பளிப்பு செய்து செலவினை மேற்கொள்ளும் பொருட்டு மாநிலத் திட்டக்குழு சமர்ப்பிக்கும் இறுதித் திருத்திய மதிப்பீடு செயற்குறிப்பில் இதனை சேர்த்து உடனடியாக அனுப்புமாறு அவர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

3) பத்தி 2(1)–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்தை இணைப்பு 1 கலம் எண் 4ல் உள்ள கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

4) இணைப்பு (3) மற்றும் (4) ல் கண்டவாறு ஊராட்சித்தலைவர்கள் மற்றும் பேரூராட்சித் தலைவர்களுக்கான திட்டமிடல் பயிற்சியை வட்டாரம் / மாவட்ட அளவில் வழங்கிட ஏதுவாக அந்தந்த மாவட்டத் திட்டப் பிரிவின் மாவட்டத் திட்ட அலுவலர்களுக்கு இணைப்பு 3 மற்றும் 4ல் கண்ட நிதி ஒதுக்கீட்டினை மாவட்ட

ஆட்சித்தலைவர்கள், சம்மந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலகம் / மாவட்ட கருவூலம் மூலம் பெற்று வழங்க அனுமதிக்கப்படுகிறது.

5) இணைப்பு (5) ல் கண்டவாறு ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள் மற்றும் மாநகர மேயர்கள் (சென்னை மாநகர மேயர் தவிர ) ஆகியோர்களுக்கான திட்டமிடல் பயிற்சி மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம் , மறைமலைநகர் / மண்டல விரிவாக்க பயிற்சி நிறுவனங்கள் / அண்ணா மேலாண்மை நிறுவனம், சென்னை / கட்டிடக்கலை மற்றும் திட்ட அமைப்புபள்ளி, அண்ணா பல்கலைகழகம் மேலாண்மை நிறுவனம் , சென்னை / தமிழ்நாடு நகரமைப்பு பயிற்சி நிறுவனம், கோயமுத்தூர் போன்ற நிறுவனங்களில் பொருத்தமான பயிற்சி நிறுவனங்களை மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினர்–செயலர் தேர்வு செய்து திட்டமிடல் பயிற்சி வழங்கிட அனுமதிக்கப்படுகிறது. அதற்கான செலவினத்தை மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினர்–செயலர் அவர்கள் சம்பளக் கணக்கு அலுவலகம் (கிழக்கு), சென்னை 5–லிருந்து பெற்று சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கிட அனுமதி வழங்கப்படுகிறது.

6) இணைப்பு (1) மற்றும் (2)ல் குறிப்பிட்டுள்ளவாறு 28 மாவட்டத் திட்டப் பிரிவுகளுக்கும் மாநிலத் திட்டக் குழுவின் குழுமத் தலைவர் (மாவட்டத் திட்டம்) உபயோகத்திற்கும் நகல் எடுக்கும் கருவி மற்றும் தமிழ் வானவில் மென்பொருள் போன்ற உபகரணங்கள் பெறுவதற்குத் தேவையான ஒதுக்கீட்டுத் தொகையை சம்பளக் கணக்கு அலுவலகம் (கிழக்கு), சென்னை 5–லிருந்து பெற்றிட மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினர்–செயலர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

7) இணைப்பு (1) மற்றும் (2) இல் குறிப்பிட்டுள்ளவாறு 28 மாவட்டத் திட்டப் பிரிவுகளுக்கும், புதிய தொலைபேசி இணைப்பு (STD வசதி இல்லாதது) மற்றும் மின் அஞ்சல் பெறுவதற்காக மோடம் போன்ற உபகரணங்கள் பெறுவதற்குத் தேவையான ஒதுக்கீட்டுத் தொகையை சம்பந்தபட்ட சம்பளக் கணக்கு அலுவலகம் / மாவட்டக் கருவூலம் மூலம் பெற்று வழங்கிட மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். மேற்கண்ட கருவிகளை நடைமுறை ஆணைகளைப் பின்பற்றி மாவட்ட ஆட்சித்தலைவர்களின் ஒப்புதலுடன் பெற்றிட மாவட்டத் திட்ட அலுவலர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

8) இணைப்பு (1) மற்றும் (2)ல் குறிப்பிட்டுள்ளவாறு 28 மாவட்டத் திட்டப் பிரிவுகளுக்குத் தேவையான ஈப்பு மற்றும் மாநிலத் திட்டக் குழுவின் குழுமத் தலைவர்(மாவட்டத் திட்டம்) உபயோகத்திற்கான சீருந்து ஆகியவற்றைப் பெறுவதற்குத் தேவையான ஒதுக்கீட்டுத் தொகையை சம்பளக் கணக்கு அலுவலகம்(கிழக்கு), சென்னை5–லிருந்து பெற்றிட மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினர்–செயலர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேற்கண்ட 28 ஈப்புகள் மற்றும் ஒரு சீருந்து D.G.S.& D அங்கீகரிக்கப்பட்ட விலைக்கு மிகாமல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வாங்கி வழங்கிட மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினர்–செயலர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

9) 28 மாவட்டத் திட்டப் பிரிவுகள் / மாநிலத் திட்டக் குழு , குழுமத் தலைவர் (மாவட்டத் திட்டம்) ஏற்பளிக்கப்பட்டுள்ள ஈப்பு / சீருந்து ஆகியவற்றை ஓட்டுவதற்காக ஏற்கனவே மாவட்டத் திட்டப் பிரிவு / மாநிலத் திட்டக் குழுவிற்கு அனுமதிக்கப்பட்டுள்ள அலுவலக உதவியாளர் பணியிடத்தை பணியிட உயர்வு மூலமாக ஓட்டுநர் பணியிடமாக மாற்றியமைப்பது குறித்து உரிய அரசாணைகள் பின்னர் தனியே வெளியிடப்படும்.

10) 28 மாவட்டத் திட்டப்பிரிவுகளுக்கு வழங்கப்படும் ஈப்பு வானகங்களின் உபயோக அலுவலர்களாக சம்மந்தப்பட்ட மாவட்டத் திட்ட அலுவலர்கள் செயல்பட அனுமதிக்கப்படுகிறது. மாநிலத் திட்டக் குழுவின் குழுமத் தலைவர் (மாவட்டத் திட்டம்) உபயோகத்திற்கு வழங்கப்படும் சீருந்திற்கான வாகன உபயோக அலுவலர்களாக குழுமத் தலைவர் (மாவட்டத் திட்டம்) செயல்பட அனுதிக்கப்படுகிறது. மாவட்டத் திட்டப் பிரிவுகளுக்குத் தேவையான 28 ஈப்புகள் மற்றும் மாநிலத் திட்டக் குழுவின் குழுமத் தலைவர் (மாவட்டத் திட்டம்) சீருந்து ஆகியவற்றுக்காகும் எரிபொருள் நடைமுறையிலுள்ள உச்ச வரம்பிற்குட்பட்டும் பராமரிப்பு செலவினங்களுக்காகும் நிதி ஒதுக்கீடு 2000–01 இறுதி மறு நிதியொதுக்கத்தில் சேர்த்துக்கொள்வதை எதிர்நோக்கி மோட்டார் வாகனம் மற்றும் பராமரிப்புத் துறை மூலம் பெற்றுக்கொள்ள சம்பந்தப்பட்ட வாகன உபயோக அலுவலர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

11) கோரிக்கை எண்.27ல் மாவட்ட பரவலாக்கப்பட்டத் திட்டத்திற்கென 2000–01ம் ஆண்டு வரவு –செலவுத் திட்டத்தில் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள ரூ.3.00 கோடியில் மாவட்டத் திட்டப் பிரிவு மற்றும் மாநிலத் திட்டக் குழுவிற்கென ஒதுக்கப்பட்ட ரூ.1,57,24,000/– மட்டும் 2000–01 ம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதி ஒதுக்கத்தில் ஒப்படைப்பு செய்யுமாறு ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

" **2515.** ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள்–**101.**ஊராட்சி நிறுவனம்– ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II. மாநிலத் திட்டம் – JF – மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டத்திற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதியுதவி–**09**– உதவி மானியங்கள்–**03** குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள் **(**தகவல் தொகுப்பு குறிப்பு எண்.**2515–00–101–**JF**–0930).**

**3)** அரசாணை நிலை எண்.204 , திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, நாள்**29.12.1999** பத்தி எண்,**2.9**–ல் நிர்வாக வசதியைக் கருதி மாவட்டத் திட்டப் பிரிவுகள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வளாகங்களில் ஏற்கனவே செயல்பட அனுமதியளித்ததை மாற்றியமைத்து, தற்போது மாவட்ட ஊராட்சி வளாகங்களில் செயல்பட அரசு அனுமதியளிக்கிறது.

**4)** இந்த அரசாணை நிதித் துறையின் அ.சா.எண்.**96**/ து.செ (என்.ஆர்) / **2001** நாள்**31.1.2001** இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**தங்கம் சங்கர நாராயணன்**
அரசு செயலாளர்

இணைப்பு–1
நிதி ஒப்பளிப்பு மற்றும் கணக்குத் தலைப்பு விவரம்

(ரூ. லட்சத்தில்)

| வ. எ | செலவின விவரம் | ஒப்பளிப்பு செய்யப்படும் தொகை | கணக்குத் தலைப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | பல்வகைத் திட்டமிடல் பயிற்சி வழங்குதல்<br>(அ) ஊராட்சி தலைவர்கள் பயிற்சி (இணைப்பு –4ன்படி) | 20.64 | 3451–தலைமைச் செயலகம்–பொருளாதாரப் பணிகள்–102. மாவட்டத் திட்டமிடல் அமைப்பு – ஒன்பதாம் ஐந் தாண்டுத் திட்டப் பணிகள்– II மாநிலத் திட்டம் – JE- மாநிலத் திட்டக் குழுவை வலுப்படுத்துதல்–மாவட்ட அளவிலான திட்ட அமைப்பை ஏற்படுத்துதல் 72.பயிற்சி (தகவல் தொகுப்பு குறி யீடு எண் 3451 –00–102–JE-7205) |
| | (ஆ) பேரூராட்சித் தலைவர்கள் பயிற்சி (இணைப்பு –5ன்படி) | 1.45 | |
| | (இ) ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் / நகராட்சித் தலைவர்கள்/ மாநகர மேயர்கள் பயிற்சி (இணைப்பு–6ன்படி) | 2.31 | |
| | பல்வகைத் திட்டமிடல் பயிற்சிக்கான செலவினம் உபமொத்தம் | 24.40 | |
| 2 | இயக்கூர்திகள் வாங்குதல்<br>அ) 28 மாவட்டத் திட்டப் பிரிவுகளுக்கும் ரூ.3.50 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக ஈப்புகள் வாங்குதல் | 98.00 | 3451–தலைமைச் செயலகம்–பொருளாதாரப் பணிகள்–102. மாவட்டத் திட்டமிடல் அமைப்பு – ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்– II மாநிலத் திட்டம் – JE- மாநிலத் திட்டக் குழுவை வலுப்படுத்துதல் – மாவட்ட அளவிலான திட்ட அமைப்பை ஏற்படுத்துதல் 21 இயக்கூர்திகள் –01 வாங்குதல்<br>(தகவல் தொகுப்பு குறியீடு எண் 3451–00–102–JE-2111) |
| | ஆ) மாநிலத் திட்டக் குழு குழுமத் தலைவர் (மாவட்டத் திட்டம்) உபயோகத்திற்கு ரூ.3.60 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக சீருந்து வாங்குதல் | 3.60 | |
| | இயக்கூர்திகள் வாங்குவதற்கான செலவினம்–உப மொத்தம் | 101.60 | |
| 3. | இயந்திரமும் சாதனமும் வாங்குதல்<br>அ) 28 மாவட்டத் திட்டப் பிரிவுகளுக்கு ரூ.97,000/– மதிப்பீட்டில் புதிய நகல் எடுக்கும் கருவி மற்றும் ரூ.3000/ – மதிப்பீட்டில் வானவில் தமிழ் மென்பொருள் வாங்குதல் | 28.00 | 3451–தலைமைச் செயலகம்–பொருளாதாரப் பணிகள்–102.மாவட்டத் திட்டமிடல் அ மைப்பு– ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்– II மாநிலத் திட்டம் – JE- மாநிலத் திட்டக் குழுவை வலுப்படுத்துதல் –மாவட்ட அளவிலான திட்ட அமைப்பை ஏற்படுத்துதல் 19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல் (தகவல் தொகுப்பு குறியீடு எண் 3451–00–102–JE-1916) |
| | ஆ) மாநிலத் திட்டக் குழுவின் குழுமத் தலைவர் (மாவட்டத் திட்டம்) உபயோகத்திற்கு புதிய நகல் எடுக்கும் கருவி மற்றும் ரூ.3000/ – மதிப்பீட்டில் வானவில் தமிழ் மென்பொருள் வாங்குதல் | 1.00 | |

| | | | |
|---|---|---|---|
| | ஆ) மாநிலத் திட்டக் குழு குழுமத் தலைவர் (மாவட்டத் திட்டம்) உபயோகத்திற்கு ரூ.97,000/– மதிப்பீட்டில் புதிய நகல் எடுக்கும் கருவி மற்றும் ரூ.3000/ – மதிப்பீட்டில் வானவில் தமிழ் மென்பொருள் வாங்குதல் | 1.00 | –மாவட்ட அளவிலான திட்ட அமைப்பை ஏற்படுத்துதல் 19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல் (தகவல் தொகுப்பு குறியீடு எண் 3451–00–102–JE-1916) |
| | இயந்திரமும், சாதனமும் வாங்குவதற்கான செலவினம்– உப மொத்தம் | 29.00 | |
| 4. | <u>அலுவலகச் செலவுகள்</u><br>அ) 28 மாவட்டத் திட்டப் பிரிவுகளுக்கு புதிய தொலைபேசி இணைப்பு (STD வசதியில்லாதது) ரூ.3000/– வீதம் பெறுதல் | 0.84 | 3451–தலைமைச் செயலகம்– பொருளாதாரப் பணிகள்– 102.மாவட்டத் திட்டமிடல் அமைப்பு– ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE- மாநிலத் திட்டக் குழுவை வலுப்படுத்துதல்– மாவட்ட அளவிலான திட்ட அமைப்பை ஏற்படுத்துதல் 05 அலுவலகச் செலவுகள் 01. தொலைபேசிக் கட்டணங்கள் (தகவல் தொகுப்பு குறியீடு எண் 3451–00–102–JE-0515) |
| | ஆ) 28 மாவட்டத் திட்டப் பிரிவுகளுக்கும் மின் அஞ்சல் வசதி பெறுவதற்காக ரூ.5000/– வீதம் மோடம் கருவி பெறுதல் | 1.40 | 3451–தலைமைச் செயலகம்– பொருளாதாரப் பணிகள்–102. மாவட்டத் திட்டமிடல் அமைப்பு – ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்– II மாநிலத் திட்டம் – JE- மாநிலத் திட்டக் குழுவை வலுப்படுத்துதல்–மாவட்ட அளவிலான திட்ட அமைப்பை ஏற்படுத்துதல் 05 அலுவலகச் செலவுகள்01. தொலைபேசிக் கட்டணங்கள்<br>(தகவல் தொகுப்பு குறியீடு எண் 3451–00–102–JE-0524) |
| | அலுவலகச் செலவுகள்–உபமொத்தம் | 2.24 | |
| | பெரு மொத்தம் | 157.24 லட்சம் | |

(ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தி ஏழு லட்சத்து இருபத்தி நான்காயிரம் மட்டும்)

**தங்கம் சங்கர நாராயணன்**
அரசு செயலாளர்

இணைப்பு– (2)
மாவட்ட வாரியாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள ஈப்பு மற்றும் கருவிகள் விவரம்

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | ஈப்பு | நகல் எடுக்கும் கருவி | வானவில் தமிழ் மென்பொருள் | தொலைபேசி வசதி | மோடம் கருவி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | மாவட்டத் திட்டப் பிரிவுகள் | | | | | |
| 1 | காஞ்சிபுரம் | 1 | 1 | 1 | 1 | 1 |
| 2 | திருவள்ளூர் | 1 | 1 | 1 | 1 | 1 |
| 3 | வேலூர் | 1 | 1 | 1 | 1 | 1 |
| 4 | திருவண்ணாமலை | 1 | 1 | 1 | 1 | 1 |
| 5 | கடலூர் | 1 | 1 | 1 | 1 | 1 |
| 6 | விழுப்புரம் | 1 | 1 | 1 | 1 | 1 |
| 7 | தர்மபுரி | 1 | 1 | 1 | 1 | 1 |
| 8 | சேலம் | 1 | 1 | 1 | 1 | 1 |
| 9 | நாமக்கல் | 1 | 1 | 1 | 1 | 1 |
| 10 | ஈரோடு | 1 | 1 | 1 | 1 | 1 |
| 11 | கோயமுத்தூர் | 1 | 1 | 1 | 1 | 1 |
| 12 | நீலகிரி | 1 | 1 | 1 | 1 | 1 |
| 13 | தஞ்சாவூர் | 1 | 1 | 1 | 1 | 1 |
| 14 | நாகப்பட்டினம் | 1 | 1 | 1 | 1 | 1 |
| 15 | திருவாரூர் | 1 | 1 | 1 | 1 | 1 |
| 16 | திருச்சிராப்பள்ளி | 1 | 1 | 1 | 1 | 1 |
| 17 | கரூர் | 1 | 1 | 1 | 1 | 1 |
| 18 | பெரம்பலூர் | 1 | 1 | 1 | 1 | 1 |
| 19 | புதுக்கோட்டை | 1 | 1 | 1 | 1 | 1 |
| 20 | மதுரை | 1 | 1 | 1 | 1 | 1 |
| 21 | தேனி | 1 | 1 | 1 | 1 | 1 |
| 22 | திண்டுக்கல் | 1 | 1 | 1 | 1 | 1 |
| 23 | ராமநாதபுரம் | 1 | 1 | 1 | 1 | 1 |
| 24 | சிவகெங்கை | 1 | 1 | 1 | 1 | 1 |
| 25 | விருதுநகர் | 1 | 1 | 1 | 1 | 1 |
| 26 | திருநெல்வேலி | 1 | 1 | 1 | 1 | 1 |
| 27 | தூத்துக்குடி | 1 | 1 | 1 | 1 | 1 |
| 28 | கன்னியாகுமரி | 1 | 1 | 1 | 1 | 1 |
| | மாநிலத் திட்டக் குழு, சென்னை | | | | | |
| | குழுமத் தலைவர் (மாவட்டத் திட்டம்) | 1 சீருந்து | 1 | 1 | –– | –– |
| | மொத்தம் | 28+1 | 29 | 29 | 28 | 28 |

**தங்கம் சங்கர நாராயணன்**
அரசு செயலாளர்

இணைப்பு– (3)

மாவட்ட வாரியான அலுவல் சாரா உள்ளாட்சி அமைப்புகளின் மக்கட் பிரதிநிதிகளுக்கான திட்டமிடல் பயிற்சி நிதி ஒதுக்கீடு

1) ஊராட்சித் தலைவர்களுக்கான வட்டார அளவிலான திட்டமிடல் பயிற்சி

2) பயிற்சி வழங்குதல்– மாவட்டத்திட்டப் பிரிவு

| வ. எ | மாவட்டத்தின் பெயர் | வட்டாரங்கள் எண்ணிக்கை | ஊராட்சித் தலைவர்கள் எண்ணிக்கை | உணவு மற்றும் தேநீர் ரூ.75/– வீதம் | பயிற்சி பொருட்கள் ரூ.50/– வீதம் | பயிற்றுநருக் கான தொகுப்பு ஊதியம் ரூ. | இதர செலவு கள் ரூ.15/– வீதம் ரூ. | மொத்த ஒதுக்கீடு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | காஞ்சிபுரம் | 13 | 648 | 48600 | 32400 | 15560 | 9720 | 106280 |
| 2 | திருவள்ளூர் | 14 | 539 | 40425 | 26950 | 12940 | 8085 | 88400 |
| 3 | வேலூர் | 20 | 753 | 56475 | 37650 | 18080 | 11295 | 123500 |
| 4 | திருவண்ணாமலை | 18 | 860 | 64500 | 43000 | 20640 | 12900 | 141040 |
| 5 | கடலூர் | 13 | 681 | 51075 | 34050 | 16350 | 10215 | 111690 |
| 6 | விழுப்புரம் | 22 | 1104 | 82800 | 55200 | 26600 | 16560 | 181160 |
| 7 | தர்மபுரி | 18 | 588 | 44100 | 29400 | 14120 | 8820 | 96440 |
| 8 | சேலம் | 20 | 376 | 28200 | 18800 | 9030 | 5640 | 61670 |
| 9 | நாமக்கல் | 15 | 331 | 24825 | 16550 | 7950 | 4965 | 54290 |
| 10 | ஈரோடு | 20 | 340 | 25500 | 17000 | 8160 | 5100 | 55760 |
| 11 | கோயமுத்துார் | 19 | 388 | 29100 | 19400 | 9320 | 5820 | 63640 |
| 12 | நீலகிரி | 4 | 27 | 2025 | 1350 | 650 | 405 | 4430 |
| 13 | தஞ்சாவூர் | 14 | 589 | 44175 | 29450 | 14140 | 8835 | 96600 |
| 14 | நாகப்பட்டினம் | 11 | 433 | 32475 | 21650 | 10100 | 6495 | 71020 |
| 15 | திருவாரூர் | 10 | 430 | 32250 | 21500 | 10320 | 6450 | 70520 |
| 16 | திருச்சிராப்பள்ளி | 14 | 407 | 30525 | 20350 | 9770 | 6105 | 66750 |
| 17 | கரூர் | 8 | 158 | 11850 | 7900 | 3800 | 2370 | 25920 |
| 18 | பெரம்பலூர் | 10 | 322 | 24150 | 16100 | 7730 | 4830 | 52810 |
| 19 | புதுக்கோட்டை | 13 | 498 | 37350 | 24900 | 11960 | 7470 | 81680 |
| 20 | மதுரை | 13 | 431 | 32325 | 21550 | 10350 | 6465 | 70690 |
| 21 | தேனி | 8 | 130 | 9750 | 6500 | 3120 | 1950 | 21320 |
| 22 | திண்டுக்கல் | 14 | 306 | 22950 | 15300 | 7350 | 4590 | 50190 |
| 23 | ராமநாதபுரம் | 11 | 443 | 33225 | 22150 | 10640 | 6645 | 72660 |
| 24 | சிவகெங்கை | 12 | 431 | 32325 | 21550 | 10350 | 6465 | 70690 |
| 25 | விருதுநகர் | 11 | 450 | 33750 | 22500 | 10800 | 6750 | 73800 |
| 26 | திருநெல்வேலி | 19 | 425 | 31875 | 21250 | 10200 | 6375 | 69700 |
| 27 | துாத்துக்குடி | 12 | 408 | 30600 | 20400 | 9790 | 6120 | 66910 |
| 28 | கன்னியாகுமரி | 9 | 88 | 6600 | 4400 | 2120 | 1320 | 14440 |
| | மொத்தம் | 385 | 12584 | 943800 | 629200 | 302240 | 188760 | 20,64,000 (அ) 20.64 லட்சம் |

இணைப்பு– (4)
மாவட்ட வாரியான அலுவல் சாரா உள்ளாட்சி அமைப்புகளின் மக்கட்
பிரதிநிதிகளுக்கான திட்டமிடல் பயிற்சி நிதி ஒதுக்கீடு

1) பேரூராட்சித் தலைவர்களுக்கான திட்டமிடல் பயிற்சி
2) பயிற்சி வழங்குதல்– மாவட்டத்திட்டப் பிரிவு

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | பேரூராட்சித் தலைவர் களின் எண்ணிக்கை | உணவு மற்றும் தேநீர் ரூ.75/– வீதம் | பயிற்சி பொருட் கள் ரூ.50/– வீதம் | பயிற்று நருக் கான தொகுப்பு ஊதியம் ரூ. | இதர செலவு கள் ரூ. | மொத்த ஒதுக்கீடு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | காஞ்சிபுரம் | 28 | 2100 | 1400 | 1200 | 1000 | 5700 |
| 2 | திருவள்ளூர் | 19 | 1425 | 950 | 1200 | 1000 | 4575 |
| 3 | வேலூார் | 29 | 2200 | 1350 | 1200 | 1000 | 5750 |
| 4 | திருவண்ணாமலை | 10 | 750 | 500 | 1200 | 1000 | 3450 |
| 5 | கடலூார் | 16 | 1200 | 800 | 1200 | 1000 | 4200 |
| 6 | விழுப்புரம் | 16 | 1200 | 800 | 1200 | 1000 | 4200 |
| 7 | தர்மபுரி | 17 | 1275 | 850 | 1200 | 1000 | 4325 |
| 8 | சேலம் | 34 | 2550 | 1700 | 1200 | 1000 | 6450 |
| 9 | நாமக்கல் | 20 | 1500 | 1000 | 1200 | 1000 | 4700 |
| 10 | ஈரோடு | 60 | 4500 | 3000 | 2400 | 2000 | 11900 |
| 11 | கோயமுத்தூர் | 59 | 4425 | 2950 | 2400 | 2000 | 11775 |
| 12 | நீலகிரி | 13 | 975 | 650 | 1200 | 1000 | 3825 |
| 13 | தஞ்சாவூர் | 22 | 1650 | 1100 | 1200 | 1000 | 4950 |
| 14 | நாகப்பட்டினம் | 10 | 750 | 500 | 1200 | 1000 | 3450 |
| 15 | திருவாரூர் | 7 | 525 | 350 | 1200 | 1000 | 3075 |
| 16 | திருச்சிராப்பள்ளி | 18 | 1350 | 900 | 1200 | 1000 | 4450 |
| 17 | கரூர் | 13 | 975 | 650 | 1200 | 1000 | 3825 |
| 18 | பெரம்பலூார் | 9 | 675 | 450 | 1200 | 1000 | 3325 |
| 19 | புதுக்கோட்டை | 8 | 600 | 400 | 1200 | 1000 | 3200 |
| 20 | மதுரை | 15 | 1125 | 750 | 1200 | 1000 | 4075 |
| 21 | தேனி | 23 | 1725 | 1150 | 1200 | 1000 | 5075 |
| 22 | திண்டுக்கல் | 24 | 1800 | 1200 | 1200 | 1000 | 5200 |
| 23 | ராமநாதபுரம் | 9 | 675 | 450 | 1200 | 1000 | 3325 |
| 24 | சிவகெங்கை | 12 | 900 | 600 | 1200 | 1000 | 3700 |
| 25 | விருதுநகர் | 10 | 750 | 500 | 1200 | 1000 | 3450 |
| 26 | திருநெல்வேலி | 38 | 2850 | 1900 | 1200 | 1000 | 6950 |
| 27 | தூத்துக்குடி | 20 | 1500 | 1000 | 1200 | 1000 | 4700 |
| 28 | கன்னியாகுமரி | 56 | 4200 | 2800 | 2400 | 2000 | 11400 |
| | மொத்தம் | 615 | 46150 | 30650 | 37200 | 31000 | 145000 |

**தங்கம் சங்கர நாராயணன்**
அரசு செயலாளர்

இணைப்பு– (5)

மாவட்ட வாரியான அலுவல் சாரா உள்ளாட்சி அமைப்புகளின் மக்கட்
பிரதிநிதிகளுக்கான திட்டமிடல் பயிற்சி நிதி ஒதுக்கீடு

1)ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கான திட்டமிடல் பயிற்சி
2) பயிற்சி வழங்குதல் – மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம்/ மறைமலைநகர் அல்லது மண்டல விரிவாக்க பயிற்சி நிறுவனங்கள்

| வ. எண் | உள்ளாட்சி மன்றத் தலைவர் பதவி விவரம் | மொத்த பயிற்சியாளர்களின் எண்ணிக்கை | மொத்த குழுக்கள் | உணவு மற்றும் இருப்பிட கட்டணம் (ரூ.200/– வீதம்) | பயிற்சி பொருட்கள் (ரூ.100/– வீதம்) | பயிற்சியாளர் மதிப்பூதியம் | பயிற்சி சுற்றுலா | இதர செலவுகள் | மொத்த ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 1 | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 28 | 1 | 5600 | 2800 | 2700 | 1000 | 1500 | 13600 |
| 2 | ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் | 385 | 11 | 77000 | 38500 | 29700 | 11000 | 16500 | 172700 |
| 3 | மாநகர மேயர்கள் மற்றும் நகராட்சித் தலைவர்கள் | 107 | 3 | 21400 | 10700 | 8100 | –– | 4500 | 44700 |
| மொத்தம் | | 520 | 15 | 104000 | 52000 | 40500 | 12000 | 22500 | 231000 |

**தங்கம் சங்கர நாராயணன்**
அரசு செயலாளர்